மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.183/2022</u>

2026ம் ஆண்டு பிப்ரவரி 24ம் நாள் செவ்வாய்க்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சுரேஷ்குமார் | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>24.02.2026 பி.வா.சா. 3 சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை</u>

1. நான் இந்த வழக்கில் நீதிமன்ற அழைப்பாணையின் அடிப்படையில் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். நான் தற்போது வெள்ளகோவில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கில் வெள்ளகோவில் கிராமம் ரீ.ச.எண்.1184/14 உட்பிரிவு விவரங்கள் குறித்து முந்தைய மற்றும் தற்போதைய புல வரைபடம் ரீசர்வே பட்டா ஆகியவற்றை நீதிமன்றத்தில் சமர்ப்பித்து சாட்சியம் அளிக்கும் படி எனக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்களை நான் இன்று நீதிமன்றத்திற்கு எடுத்து வந்துள்ளேன்.

2. மேற்படி ரீ.ச.எண்.1184/14 பூமிகளானது தற்போது ரீ.ச.எண்.1184/14A முதல் 1184/14E வரை உட்பிரிவுகள் செய்யப்பட்டுள்ளது. ரீ.ச.எண்.1184/14D பூமி ஆனது உட்பிரிவு செய்யப்பட்டு சின்னப்ப

நாடார் என்பவர் பெயரில் நத்தம் பட்டா வழங்கப்பட்டுள்ளது. மேற்படி ரீ.ச.எண்.1184/14D பூமிக்கான கணினி நத்தம் பட்டா மற்றும் கணினி பதிவேடு ஆகியவற்றை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். அது சா.சா.ஆ.1 மற்றும் சா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ரீ.ச.எண்.1184/14 பூமியை பொறுத்து சின்னப்ப நாடார், பழனிசாமி நாடார், வீரம்மாள் ஆகியோர்கள் பெயரில் நில அளவை பட்டா வழங்கப்பட்டுள்ளது. அதன் சான்றிட்ட உண்மை நகலை நான் சா.சா.ஆ.3 ஆக தாக்கல் செய்கிறேன்.

3. ரீ.ச.எண்.1184/14A முதல் C பூமிகளுக்கு சின்னப்ப நாடார் மற்றும் பழனியப்ப நாடார் பெயரில் பட்டா எங்கள் ஆவணங்களின் அடிப்படையில் உள்ளது. ரீ.ச.எண்.1184 பூமியின் கணினி புல வரைபடம் சா.சா.ஆ.4 ஆவணமாக தாக்கல் செய்கிறேன். ரீ.ச.எண்.1184/14D பூமியில் வீடு உள்ளது. அதில் மணி என்பவர் குடியிருந்து வருகிறார். ரீ.ச.எண்.1184/14D பூமிக்கு பட்டா எண்.333 அந்த பட்டா சின்னப்ப நாடார் பெயருக்கு வழங்கப்பட்டுள்ளது. ரீ.ச.எண்.1184/14A, ரீ.ச.எண்.1184/14B மற்றும் ரீ.ச.எண்.1184/14C ஆகியவற்றில் வீடுகள் அமைந்துள்ளது. ரீ.ச.எண்.1184/14E பூமிக்கு பட்டா இதுவரை யார் பெயருக்கும் வழங்கப்படாமல் காலியிடமாக உள்ளது.

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. மனைவரி பட்டா மற்றும் தோராயபட்டா ஆகியவை தற்காலிகமாக வழங்கப்படுபவை என்றால் சரிதான். ரீ.ச.எண். 1184/14 பூமியில் உட்பிரிவு செய்யப்பட்டு பட்டா வழங்கப்பட்ட இடங்கள் அனைத்தும் இந்த வழக்கின் வாதி மாணிக்கவாசகம் என்பவருக்கு கிரையப்படியும்

செட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையிலும் பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். தோராய பட்டா மற்றும் மனை வரி பட்டாக்கள் ஆகியவை கள ஆய்வு செய்து பட்டா மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்ததன் அடிப்படையில் வழங்கப்படுபவை அல்ல என்று சொன்னால் கள ஆய்வு செய்துதான் யார் அனுபவத்தில் இருக்கிறார்களோ அதை பொறுத்து பட்டாக்கள் கொடுப்போம்.

2. நாங்கள் வழங்கியுள்ள பட்டாவில் கண்டுள்ளபடி சின்னப்ப நாடார் என்பவர் ரீ.ச.எண்.1184/14D பூமியில் குடியிருந்து வரவில்லை என்றால் சரிதான். ரீ.ச.எண்.1184/14D பூமியில் குடியிருந்து வராத சின்னப்ப நாடார் என்பவருக்கு வழங்கியுள்ள பட்டா செல்லாது என்றால் ஆமாம். நான் தாக்கல் செய்துள்ள புல வரைபடத்தில் கண்டுள்ள ரீ.ச.எண்.1184/14A,B,C,D ஆகிய பூமிகள் இந்த வழக்கின் வாதி மாணிக்கவாசகம் என்பவருக்கு பட்டா படியும் செட்டில்மெண்ட் படியும் 0.54–½ சென்ட் பூமிக்குள் தான் அமைந்துள்ளது என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் சா.சா.ஆ.3 ஆன கணினி சிட்டாவில் மணி என்பவர் பெயர் இல்லை என்றால் சரிதான்.

3. என்னிடம் காண்பிக்கப்படும் சா.சா.ஆ.1 ஆவணமான ரீ.ச.எண்.1184/14D பூமிக்கான நத்தம் பட்டாவானது தற்காலிகமாக தோராயமாக கொடுக்கப்படுவது என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் சா.சா.ஆ.2 ஆன அ பதிவேட்டில் எந்த நபர்கள் பெயரும் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான். ரீ.ச.எண்.1184/14 பூமியின் மொத்த விஸ்தீரணம் 9 ஏக்கர் 62 சென்ட் என்றால் சரிதான். மேற்படி புல எண்ணில் வாதி பூமிக்கு தென்புறமாக

ஒரு கிழமேல் சாலை செல்கிறது என்றால் சரிதான். அதற்கும் தென்புறமாக ஒரு வீடு உள்ளது என்றால் ஆமாம்.

4. அதில் தான் சின்னப்ப நாடார் மற்றும் மணி வகையறா ஆகியோர்கள் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். மனை வரி பட்டா மற்றும் தோராய பட்டா ஆகியவை எந்த ஒரு பதிவு செய்யப்பட்ட ஆவணத்தையும் பரிசீலனை செய்து வழங்கப்படும் ஆவணங்கள் அல்ல என்றால் சரிதான். மனைவரி பட்டா மற்றும் தோராய பட்டாவில் கண்டுள்ள நிலங்களைப் பொறுத்து அதன் உரிமையாளர்கள் தங்களது உரிமை ஆவணங்களை ஒப்படைக்கும் பட்சத்தில் எப்போது வேண்டுமானாலும் மனை வரி பட்டா மற்றும் தோராய பட்டா ஆகியவற்றை ரத்து செய்யலாம் என்றால் சரிதான்.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2026.02.24 19:01:32 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்.